# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064892

1. District : மாவட்டம் சென்னை | PS: காவல்நிலையம் V&AC, CC-II | Year: ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 01/AC/2020/CC-II | Date: நாள் 03.01.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018. | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 30.12.2019
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை மாலை சுமார் 5 மணியளவில்
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.01.2020 | Time : நேரம் 08.00 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.01.2020 | Time : நேரம் 08.00 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — எழும்பூர் - நுங்கம்பாக்கம் வட்டாட்சியர் அலுவலகம். சுமார் 13 கி.மீ, வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சேத்துப்பட்டு, சென்னை-31.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. J. ரேஞ்சன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. ஜெயராஜ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 43 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ஜவுளி எக்ஸ்போர்ட் சம்பந்தமான தொழில் | (g) Address : முகவரி No. 21, சமதி [illegible], [illegible] கிராமம், கூடுவாஞ்சேரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. ஜானகிராமன், நில அளவையர், எழும்பூர். நுங்கம்பாக்கம் வட்டாட்சியர் அலுவலகம், சேத்துப்பட்டு, சென்னை. 31.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியால் தாமதம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M. சிவக்குமார் பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Sivakumar
03.01.2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

03.01.2020
03.01.2020

Name: பெயர் M. சிவக்குமார்
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண்
சென்னை-கோட்டூர்புரம்-2,
V4AC, சென்னை-16.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

....Continuation to column no.12 of FIR in No.1/AC/2020/CC-II

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது : சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு -2-ன் காவல் ஆய்வாளர் M.விஸ்வகுமார் ஆகிய நான் 02.01.2020-ந்தேதி மாலை 16.00 மணிக்கு அலுவகத்தில் பணியிலிருந்தபோது சென்னை, காஞ்சிபுரம் மாவட்டம், கூடுவாஞ்சேரி, நீலமங்களம் கிராமம், சுமதி ஸ்கூயர், எண்.21 -ல் வசிக்கும் திரு.J.ரேண்சன் என்பவர் அலுவலகம் வந்து நேரடியாக கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் மறைமுக விசாரணை செய்து இன்று 03.01.2020-ந் தேதி காலை 08.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர், J.ரேண்சன், எண்.21, சுமதி ஸ்கொயர், நீலமங்களம் கிராமம், கூடுவாஞ்சேரி, காஞ்சிபுரம் மாவட்டம். பெறுநர், உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, ஆலந்தூர், சென்னை - 16. ஐயா, நான் கடந்த ஆறு வருடங்களாக ரியல் எஸ்டேட் சம்பந்தமான தொழில் செய்து வருகின்றேன். எனக்கு பரிச்சயமான கூடுவாஞ்சேரியை சேர்ந்த திரு.சுதாகர் என்பவர் நுங்கம்பாக்கம், நமசிவாயபுரத்தில் P.No. 266, கதவு எண். 101 என்ற விலாசத்தில் உள்ள அவருடைய சொந்த இடத்திற்கு பட்டா வாங்கி கொடுக்குமாறு உதவி கோரினார். நான் அவரிடத்தில் தேவையான ஆவணங்களை வாங்கிக் கொண்டு கடந்த அக்டோபர் மாதம் பட்டா வாங்குவதற்காக எழும்பூர் - நுங்கம்பாக்கம் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று அங்கே உள்ளே இ-சேவை மையம் மூலம் திரு.சுதாகர் பெயரில் பதிவு செய்தேன். 29.11.2019 அன்று நுங்கம்பாக்கம்-எழும்பூர் தாலுக்கா ஆபிஸ் சர்வேயர் திரு.ஜானகிராமன் மற்றும் முனுசாமி ஆகியோர் நுங்கம்பாக்கத்தில் உள்ள நமசிவாயபுரம் இடத்திற்கு வந்து திரு.சுதாகர் அவர்களின் நிலத்தை அளவீடு செய்தார்கள். நானும் திரு.சுதாகர் அவர்களின் இடத்திற்குரிய ஆவணங்களுடன் உடனிருந்து வேலையை முடித்தேன். அதன்பின்பு எந்த தகவலும் தெரியாததால் 18.12.2019 ம் தேதி நான் தாலுகா ஆபிஸ் சென்று திரு.சுதாகர் அவர்களுடைய பட்டா சம்மந்தமாக ஆபிஸ்சில் இருந்த துணை வட்டாட்சியர் திரு.ரவிச்சந்திரன் அவர்களிடம் கேட்டபோது அவர் எங்களுடைய பைல் சர்வேயர் திரு.ஜானகிராமனிடம் நிலுவையில் உள்ளதாகவும் அவரை சென்று பார்க்குமாறு கூறினார். மாடியில் சென்று பார்த்தபோது திரு.ஜானகிராமன் இல்லாததால் மறுநாள் 19.12.2019 ம் தேதி மீண்டும் தாலுகா ஆபிஸ் சென்று திரு.ஜானகிராமன் அவர்களை சந்தித்து பட்டா சம்மந்தமாக கேட்டேன். அவர் எங்களுடைய பைல் அவரிடம் இருப்பதாகவும், இரண்டுவாரம் கழித்து வந்து பார்க்குமாறு கூறினார். அதனால், நான் 30.12.2019 தேதி எழும்பூர்-நுங்கம்பாக்கம் தாலுகா ஆபிஸ் சென்றபோது திரு.ஜானகிராமன் அலுவலக விசயமாக வெளியே சென்றிருப்பதாகவும், மாலை வந்து பார்க்குமாறும் கூறினார்கள். நான் மீண்டும் மாலை சுமார் 5ந்து மணி அளவில் தாலுகா ஆபிஸ் சென்று பார்த்தபோது சர்வேயர்

திரு.ஜானகிராமன் அவருடைய இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரிடம் சென்று திரு.சுதாகர் அவர்களுடைய பட்டா வழங்குமாறு கேட்டபோது அவர் எல்லாம் ரெடியாகி விட்டது. எனக்கு ரூபாய் ஐந்தாயிரம் கொடுத்துவிடுங்கள், நான் பட்டா கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது, இடத்தின் ஓனர் கொடுத்தால்தான் நான் தரமுடியும் என்று சொன்னேன். அதற்கு அவர் பணம் கொடுத்தால்தான் பட்டா தரமுடியும், பணம் இல்லைனா உனக்கு பட்டா கிடையாது போ என்று சொல்லிவிட்டார். நான் வெளியே வந்துவிட்டேன். எனக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டது. நான் திரு.சுதாகர் அவர்களிடம் சர்வேயர் திரு.ஜானகிராமன் பட்டா தருவதற்கு ரூபாய் ஐந்து ஆயிரம் லஞ்சம் கேட்கிறார் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னால் எந்த லஞ்ச பணமும் தர முடியாது, உங்ககிட்ட வேலையை கொடுத்துவிட்டேன். வேலையை முடித்து கொடுக்க வேண்டியது உங்க பொறுப்பு. வேண்டுமானால் உங்களுக்கு சர்வீஸ் சார்ஜ் தருகிறேன் என்று கூறிவிட்டார். எனவே திரு.ஜானகிராமன், சர்வேயர் பட்டா தருவதற்கு கேட்ட லஞ்ச பணம் ரூ.5 ஆயிரத்தை எனக்கு கொடுக்க விருப்பமில்லாததால் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு இன்று 02.01.2020ம்தேதி தங்களிடம் புகார் அளிக்கிறேன். இப்படிக்கு Sd. (XXX) J.ரேண்சன், 02.01.2020. Sir, Received a complaint on 02.01.2020 at 16.00 hrs. Sd (XXX) M.Visvakhumar, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16. Sir, after due verification, a case was registered in V &AC, Chennai City –II, Cr.No.01/AC/2020/CC-II, U/s. 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 03.01.2020 at 08.00 hrs. Sd (XXX) M.Visvakhumar, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16.

The original FIR along with complaint submitted before the Hon'ble Special Judge, for cases under PC Act, Special Court, Chennai and other copies submitted to officer concerned.

M.Visvakhumar
03.01.2020
Insp., CC.II,
V&AC, Ch.16.